DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC. No. 171/2019

Deposition of LW5 examined as PW2 Dt.27.02.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அண்ணாதுரை | Caste | : | |
| Father's/Husband's Name | : | முருகையன் | Calling | : | |
| Village | : | வரகடை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 53/2024 |

(Accused present )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டீக்கடை வைத்து வேலை வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் ஊரில் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மாதம், தேதி நினைவில் இல்லை. சம்பவம் நடந்த மறுநாள் போலிசார் எனது டீக்கடைக்கு வந்து விசாரித்தார்கள் சம்பவம் பற்றி விசாரித்தார்கள் எனக்கு தெரியாது என்று சொன்னேன். என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான்.